# கலித்தொகைக் காட்டும் வாழ்வியல் நெறி

**க.கிருஷ்ணன் & முனைவர். B.சுனிதா**

**கவின்கலை பல்கலை கழகம், சென்னை**

## ஆய்வு நோக்கம்

சங்க இலக்கியம் த மிழர் வாழ்விற்கு கற்றுத்தந்த நெறிகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று வீரம் மற்றொன்று காதல். இரண்டும் தமிழர்களுக்கு இரண்டு கண்களாக போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. உலக இலக்கியங்களின் உச்சத்தில் நிற்கும் தமிழ் மொழியின் சங்க இலக்கியம் காட்டும் வாழ்வில் நெறியை , சங்க இலக்கிய இந்நூல்களில் ஒன்றான கலித்தொகையில் காணலாம். செய்திகளை நினைவில் கொண்டு கலித்தொகை காட்டும் வாழ்வியல் நெறி என்ற தலைப்பின்கீழ் இக்கட்டுரை அமைக்கப் பெறுகிறது.

## முன்னுரை

ஆதிகாலத்தில் மனிதன் ஆடையில்லாமல் ஆதிவாசியாக அலைந்து கொண்டிருந்தபோது அவனை நெறிப்படுத்தவும் சரிப்படுத்தவும் தோன்றிய கருவிகளில் ஒன்றுதான் மொழி , அம்மொழிகளின் வழி சான்றோர்கள் மனிதவாழ்க்கைக்குத் தேவையான அறம் , நெறி, பண்பு, ஒழுக்கம், வீரம், அல்லவை, நல்லவை, போன்றவைகளைப் போதித்து வந்தனர். பிற்காலத்தவர்கள் சான்றோர்களின் வாய் வழியாக வந்த

போதனைகளை நூல்வடிவில் கொண்டு வந்து தனது தலைமுறைக்கு வழிவழியாகப் போதனைகளை கற்பித்தனர்.

தமிழ் மொழியானது எப்போது தோன்றியது என்று இதுவரை யாரும் அறிதிட்டு கூற முற்படவில்லை இருப்பினும் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மூத்த மொழியாக அறிஞர் பெருமக்களால் அனுமானிக்க முடிகிறது.

உலக இலக்கியங்களுக்கெல்லாம் தமிழில் தோன்றிய சங்க இலக்கியம் இலக்கியங்களின் இமயம் என்று போற்றி பறை சாற்றப்படுகிறது. அதற்கான காரணம் என்னவென்று பார்த்தால் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் வெறுமையான இலக்கியங்களாக அல்லாமல் இலக்கியத்திற்குள்ளே வாழ்க்கைக்குத் தேவையான லட்சியங்களை கற்பிக்கத் தொடங்கின. அந்த லட்சியத்தின் வழியாக மனிதர்களை வழி நடத்தவும் தொடங்கின.

**கலித்தொகையின் சிறப்பு**

சங்க இலக்கியங்கள் என்று எடுத்துக்கொண்டால் தொகை நூல் எட்டும் பாட்டு நூல் பத்தும் சேர பதினெட்டு நூற்களையும் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் என்றே கவனத்தில் கொள்கிறோம். இந்த ஒவ்வொரு நூலிற்கும் தனிச்சிறப்பு உள்ளது. அவ்வகையில் கலித்தொகையின் சிறப்பு என்று பார்த்தால்

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு, அகம், புறம் என்று

இத்திறத்த எட்டுத் தொகை

மேற்கண்ட பாடலின் வழி கற்றறிந்தார் ஏத்தும் கலி யே என்று வருகிறபோது ஏதோ மோனைக்காக எழுதப்பட்ட சொற்கள் அல்ல இவை. இதனை கற்றோர்கள் உய்த்து , உணர்ந்து, தெளிந்து, எழுதப்பட்டவையே. இதுவரை எந்த இலக்கியமும் சொல்லாத அழகிய கருத்தொன்றைக் கலித்தொகை கூறுகின்றது.

தன்னைப் போல் பிறரையும் எண்ணி பிறருக்கு ஏற்படும் துயரையும் தன் துயராகக் கருதி வாழவேண்டும் என்ற அறக் கருத்தினை போதிக்கிறது. அவ்வாறு பிறர் துயரை த் தன் துயராக எண்ணி வாழ்பவரே சான்றோர் என்று சாடுகிறது. மனிதன் மேம்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டும் என்றால் , பிறர் இன்பத்தில் அவன் பங்கு பெறாவிட்டாலும் துன்பம் உடையோருக்கு த் துணையாய் நின்று அதில் பங்கு பெற வேண்டும் என்பதே கலித்தொகையின் பண்பாக இருக்கிறது.

கலித்தொகையைப் பற்றி மூத்தப் புலவர் தொல் காப்பியர் கூறுகிறபோது

நாடக வடிக்கினும் உலகியல் வழக்கிலும்

பாடல் சான்ற புலனைறி வழக்கம்

கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்

உரிய தாகும் என்மனார் புலவர்”

மேற்கண்ட பாடலில் ‘என்மனார் புலவர் ’ என்று வருகிறபோது , தொல்காப்பியத்தில் உள்ள 1602 நுற்பா வில் ஏறக்குறைய 250 நூற்பாக்கள் என் மனார் புலவர் என்றே முடிகிறது. தொல்காப்பியருக்கு முன்பு வாழ்ந்த புலவர்களே கலித்தொகையைப் பற்றி கற்பித்துள்ளனர்.

உலகத்தார் வாழ்ந்த ஒழுக்கமான வாழ்க்கையை அப்படியே கூறாமல் அதனோடு கற்பனையையும் இணைத்துக் கூற வேண்டும் என்கிறார். அப்படி கூறப்பட்ட நூல்களில் சங்க இலக்கியங்களில் இரண்டு நூல்கள் காணப்படுகிறது. அதில் ஒன்றுதான் கலித்தொகை. இத்தகைய கலித்தொகையை வாசிக்கிறபோது நம் கண்முன்னே நாடகம் நடப்பது போல் காட்சிகள் தோன்றி நெஞ்சத்தில் நிற்கும். அதோடு மட்டுமல்லாமல் கலித்தொகை கூறிய உலக ஒழுக்கங்களையும் நெறிகளையும் பண்புகளையும் நயம்பட எடுத்துரைக்கின்றன.

நெறி

நெறி-வளைவு: சுருள்: சமயம்

விதி: ஒழுக்கம்: வழி

நெறி என் னும் சொல்லிற்கு அகராதிப்படி பொருள் தேட முற்படும்போது ஏறக்குறைய ஆறு வகையானப் பொருள்களை க் குறிக்கிறது. அதில் சமயம் , ஒழுக்கம் வழி என்ற மூன்று, சொற்களும் நெறி என் பதனை முழுமையாக ப் பிரதிபலிக்கப்படும் சொல்லாக அறியப்படுகிறது.

**வாழ்வியல் நெறி**

வாழ்வியல் நெறி என்று வருகி ன்றது போது, பல்வேறு சொற்பொருட்களை உள்ளடங்கியதாய் காணப்படுகிறது. உதாரணமாக , அறம், அன்பு, பண்பு, வாய்மை, நீதி, கடமை, அடக்கம், ஒழுக்கம், ஈகை, வழக்கம், போன்ற சொற்களை முதன்மைப்படுத்தலாம். மேற்கண்ட சொற்பொருளின் வழி கலித்தொகையில் பல்வேறு பாடல்கள் பொதிந்து கிடக்கிறது. அதில் இக்கட் டுரைக்குத் தேவையான பாடங்களை மேற்கோள்காட்டி மனிதவாழ்விற்கு நெறியான செய்திகளை காண்போம். அறமும் நெறியும்

“எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடை நீழல்
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல் அசைஇ வேறு ஓரோ நெஞ்சத்துக்
குறிப்புஏவல் செயல்மாலைக் கொளை நடை அந்தணீர்”

கலி - 9

சூரியனின் வெப்பம் தாளாமல் குடைப்பிடித்துக் கொண்டு வரும் அந்தணன் ஒருவரைப் பார்த்து , ஒருவள் கேட்கிறாள் -------நீங்கள் வரும் வழியில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து செல்வதை நீங்கள் பார்த்தீர்களா. அதற்கு அந்த அந்தணர் பார்த்தோம் அது அறம் என்று நினைத்து நாங்கள் எங்கள் வழியில் வந்தோம். அந்த அழகான ஆண்மகனோடு செல்வது உன்மகள்தானே.

சந்தனம் மலையில் இருந்தாலும் அதனை பூசிக்கொள்பவர்க்குத்தான் இன்பம் தரும். சந்தனத்தால் மலைக்கு எந்தபலனும் இல்லை. யாழின் இசை அதனை வாசிப்பவர்க்குத்தான் இன்பம் தரும். அந்த இசையால் யாழிற்கு எந்த பயனும் இல்லை. இது போலத்தான் உன்மகளும் அவளால் உனக்கு எந்த பயனுமே இல்லை. தனக்கு சிறந்த உறவாகிய கணவரோடு இணைந்து இல்லற நெறியில் பண்பே மாறாமல் இருப்பதற்கு அதுவே காரணம். நீயும் வருந்த வேண்டாம். அவளுக்கும் துன்பம் தரவேண்டாம் என்று கூறுகிறார் அந்தணர்.

மகளைப் பிரிந்து துன்புரும் தாயின் துன்பத்தை த் தனது துன்பமாக கருதி, அவளை தேற்றுவதற்காக மேற்கண்ட செய்தியினைக் கூறுகிறார். சங்க காலத்தில் ஒரு பெண் யாரோடு வாழ வேண்டும் என்பதை த் தனித்து முடிவு செய்யக் கூடிய ஆற்ற லை பெற்றிருக்கிறாள். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ம னம் உவந்து செய்துகொண்ட

திருமணத்திற்கு யாரேனும் தடையாக இருந்தால் அது அறமாகாது. தான் விரும்பும் ஆண்மகனோடு வாழ முடியவில்லை என்றால் அது நெறியாகாது என்ற அறக்கருத்தினை இப்பாடல் உணர்த்துகிறது. அதோடு மட்டுமல்லாமல் , அதற்காக நாம் வருந்தவும் கூடாது. அவர்களுக்குத் துன்பத்தையும் தரக்கூடாது என்பதையும் இப்பாடல் புலப்படுத்துகிறது. இதனை,

"இன்பத்தின் இகந்துஒரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடு, என்றார்., அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசை இய வருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவு எனவும் உரைத்தனரே
கம்மிசை வேய்வாடகக் கனைகதிர் தெறுதலான்.4" கலி 11

ஒரு மனிதன் வாழ்க்கையில் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்றால் அடிப்படைத் தேவைகளில் மிகப்பெரிய ஒன்று செல்வம் அச்செல்வம் என்பது எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடாது. அது யாருக்கெல்லாம் கிடைக்கும் என்பதே இப்பாடலின் பாடுபொருளாக அமைந்துள்ளது.

1. கருணை உடையவர்களுக்கு விரும்பியதைத்தரும்
2. எளிதில் பெறமுடியாத அறத்தின் பயணையும் தரும்
3. அன்போடு வாழ்வதற்கு இல்லற இன்பத்தினையும் தரும்.

இம்மூன்று பயன்களையும் பெறவேண்டுமானால் அதற்கு செல்வம் வேண்டும் அத்தனை ச் செல்வத்தை ப் பெறுவதற்கு த் தலைவன் , தலைவியை விட்டு பொருள் தேட புறப்பட்டுவிடுகிறான். அவனால் நெடுங்காலம் தங்க இயலாது. அதற்கான காரணத்தை நான் கூறுகிறேன் என்று தலைவி இப்படிக் கூறினாள்.

ஆண்யானை, பெண் யானை , யானைக்கன்று, இவைகள் நீரின் வேட்கையால் தண்ணீர் குடிக்கச் செல்லும். சிறிதளவே இருக்கின்ற நீரை யானைக்கன்று கலக்கி விடும். அந்த தண்ணீரை ப் பெண் யானை குடித்த பிறகே ஆண் யானை குடிக்கும்.

வெப்பத்தின் மிகுதியால் காட்டில் பெண்புறா வின் அதன் சோர்வினைப் போக்க ஆண்புறா தனது சிறகால் காற்றி னை எழுப்பி பெண்புறாவின் துன்பத்தைப் போக்கும்.

காட்டில் வெயில் மிகுதி யால் மரம், செடி, கொடிகள் எல்லாம் சருகாய் உதிர்த்து கிடக்கும். அக்காட்டில் பெண் மான் களைப்பாருவதற்கு நிழல் தேடி இன்னலுக்கு உள்ளாகும். அதனைக் கண்ட ஆண் மான் தன் நிழலையே தந்து ஆசுவாசப்படுத்தும். இந்த நிகழ்வினை எல்லாம் எனக்குச் சொன்னவர் என் தலைவன். ஆதலால் தான் அவர் என்னை விட்டு பிரிந்து இருக்க மாட்டார். விரைந்து வந்து விடுவார் என்று தலைவி சொல்கிறார்.

ஒரு மனிதன் கருணை உள்ளவனாகவும் அறம் மிக்கவனாகவும் வாழ வேண்டுமாயின், அவன் பேரன்பு கொண்டவனாகவும் எல்லா ஜீவன் இடத்திலும் அன்புடையவனாக இருக்க வேண்டும்.

அந்த அன்பினை தன்னோடு வாழ்கின்ற துணையுடனும் செலுத்த வேண்டும். மனிதன் ஆறறிவு பெற்றிருக்கின்றான் என்று பெ ருமை பட பேசிக் கொண்டோம். தன் துணையுடன் வாழ்கின்ற அன்பினை க் குறைந்த பட்ச அறிவுடைய , பறவைகளுடனோ, விலங்குகளுடனோ கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. இச்செய்தியினை க் கலித்தொகையில் பண்பும் ஈகையும்

எஃகு இடை தொட்ட, கார்க் கவின் பெற்ற ஐம்பால்போல் -
மையற விளங்கிய துவர்மணலது அது
ஐதாக நெறித்தன்ன அறல் அவிர் நீள் ஐம்பால்
ஆணிநகை இடையிட்ட ஈகையம் கண்ணிபோல்.5 கலி 32

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாம். பருவ காலத்தில் மரக்கிளையில் அரும்புகள் தொடங்கும் அரும்புகளை ச் சுற்றியும் யாழ்போல் இசையெழுப்பிக்கொண்டு வண்டுகளின் ஆரவாரத்தைப் பார்க்கின்றபோது பெண்கள் ஆடுகின்ற நடனத்தைப் பார்க்கத் தூண்டும் அதுபோல அரும்புகள் தோன்றிய மரக்கிளை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும். அறத்தை உணர்ந்தவர்களின் கொடை போல

பூங்கொத்துகள் நிறைந்து பயன் பெறக் கூடியதாக இருக்கும். இப்பாடலை அறத்தை உணர்ந்தவர் கொடைபோல என்று வருகிறபோது அறம் என்பதனை உணர்ந்தால் மட்டுமே ஈகை கொடுக்க முடியும். ஈகை கொடுப்பதற்கான எண்ணமும் இருக்கும். அத்தகையான ஈகை அனைவருக்கும் பயன்படும்படி அமைதல் வேண்டும்.

"மெய்யறிந்து ஏற்றெழுவேன் ஆயின், மற்று ஒய்யென
ஒண்குழாய் செல்க எனக்கூறி விடும்பண்பின்
அங்கண் உடையன் அவன்.6" கலி 37

தோழி கூற்றாக அமைந்த இப்பாட லில் எந்த ஒருப் பெண்ணும் செய் ய துணியாத ஒரு செயலை ச் செய்துள்ளா ள் தலைவி. அச்செயலை நாடகக் காட்சியைப்போல் ஒன்றன்பின் ஒன்றாக காணலாம்.

தலைவி திணைப்புணத்திற்கு காவல் காத்தபடியே குறிஞ்சி நிலத்தில் பறவைகளை விரட்டும் பணியில் ஈடு பட்டுக்கொண்டிருக்கிறாள். அங்கு வருகிற ஒருவன் கையில் வில் ஏந்தியபடி விலங்குகளை வேட்டையாடுவதுபோல் வருகிறான். உண்மையாகவே அவன் வேட்டையாட வர வில்லை, வேட்டையாடுவதுபோல் பாவனை செய்து கொண்டு தலைவியைப் பார்க்க வருகிறான் என்ற செய்தியை உணர்ந்த தலைவி அவனை நன்கு கவனிக்கிறாள். இச்செய்தி அனுதினம் நடந்தவண்ணம் இருக்கிறது. வேட்டையாடுவதுபோது பாவனை

செய்துகொண்டு வருபவன். வாய்திறந்தும் எதுவும் பேசவில்லை குறிப்பாலும் எதையும் உணர்த்தவில்லை. அவன் விரும்புவதை உணர்ந்து தலைவி அவனை நினைத்து உடல் மெலிந்து போகிறாள். இப்படியே போனால் தலைவன் இறந்து போகவும் வாய்ப்புள்ளது. இதனை ஒரு வழி செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொண்ட தலைவி ஒரு நாள் தினைப் புணத்திற்கு அருகில் ஊஞ்சல் கட்டி ஆடினாள். அவன் அப்போது அங்கே வந்தான். தலைவி அவனை அழைத்து ஊஞ்ச லை ஆட்டும்படி சொல்ல அவனும் ஆட்டுவித்தான். தலைவன் ஆட்ட தலைவி ஆடுவதுமாக இருந்து கொண்டிருக்கையில் தலைவியோ கை நழுவி விழுவதைப்போல பொய்யாக பாவனை செய்து தலைவனின் மார்பில் சாய்ந்து கொள்கிறாள். அதனை மெய்யென நினைத்த தலைவனும் அனைத்துக் கொள்கிறான். சிறிது நேரம் மயங்கி இருந்தது போல இருந்து விட்டு பின்னர் எழுந்திருக்கிறாள். இச்செயலை எதிர்ப்பார்க்காத தலைவன் , பெண்ணே இதனை யாராவது பார்க்க நேர்ந்தால் பழிபேசுவார்கள். நேரமும் கழிந்து கொண்டிருக்கிறது. இங்கிருந்து நீ விரைந்து போ. என்று கூறி தலைவியைத் தலைவன் பாதுகாப்போடு அனுப்பி வைக்கிறான்.

ஒரு ஆணும் பெண்ணும் தனிமையில் இருக்கிறபோது அங்கே எந்தவிதமான அத்துமீறல்களும் சல்லாபங்களும் இல்லாமல்

தலைவியைப் பாதுகாப்பாக அனுப்பிவைத்த நிகழ்வை தலைவி தன் தோழியிடம் கூறி தலைவனின் பண்பைப் பாராட்டுகிறாள்.

ஒரு பெண்ணிற்கு ஆண் என்பவன் பாதுகாப்பாகவும் அரனாகவும் இருக்க வேண்டும் என்பதை இப்பாடல் காட்சிகள் உணர்த்துகின்றது.அறத்தோடு நின்றல்

"அறத்தொடு நின்றேனைக் கண்டு, திறம்பட
என்னையர்க்கு உயர்த்து உரைத்தாள், யாய்.
ஒருபகலெல்லாம் உருத்தெழுந்து ஆறி
இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று 6" கலி 39

அறத்தோடு வாழ்பவர்களுக்கு அத்தகைய அறமானது வாழ்வில் துன்பங்களைப் போக் கி இன்பங்களை அளிக்கும். அறம் தவறி வாழ்பவர்கள் துன்பத்தில் எளிதாக மாட்டிக்கொள்வார்கள். அதோடு மட்டுமல்லாமல் தன் வாழ்வாதாரம் அனைத்தையும் இழக்க நேரிடும் என்பதனை தோழிக் கூற்றாக அமைந்த கலித் தொகைப் பாடல் கூறுகிறது.

தலைவி ஒரு நாள் தோழிகளோடு ஆற்றில் குளிக்கப் போகிறாள். அத்தருணத்தில் கால் இடறி ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்கிறாள். அதைப்பார்த்துக்கொண்டிருந்த ஒரு ஆண் மகன் ஆற்றில் இறங்கி

தலைவியைப் பற்றி மார்போடு அணைத்து கரை சேர்த்தான். இக்காட்சியினைக் கண்டவர்களுக்கு இருவரும் தழுவிக்கொள்வது போன்று தோன்றுகிறது.

தலைவி நற்பண்புடையவள் என்பதால் தான் நினைத்தால் மழைபொழிய வைக்கும் அளவிற்கு கற்புடையவள். அவள் அனுமதியின்றி யாரும் தீண்டிவிட முடியாது.

தலைவித் திருமண ஏற்பாடு செய்கிறார்கள். தலைவியின் உயிரைக்காத்த அவ ருக்கு மணம் முடித்து வைக்காமல் வேறு யாருக்கோ மணம் முடிப்பது அறம் ஆகாது. இத்தகைய அறம் அற்ற செயலைச் செய்தால் என்வெல்லாம் நடக்கும் என்பதை,

நம் நிலத்தில் வள்ளிக் கிழங்கு உண்டாகாது
தேன் ஈக்கள் தேன் கூட்டை கட்டாது
பயிர்கள் கதிர்விடாது
ஆடவர் வேட்டைக்கும் சென்றால் குறி தவறும்

அறம் தவறி நடந்தால் நம் நாட்டில் இவையெல்லாம் நடக்கும் என்று தோழி தலைவியின் தாய்க்கு எடுத்துரைக்கிறாள். இச்செய்தியினை க் கேட்ட தாயும் தவற்றை உணர்ந்து அறத்தோடு நின்றாள்
யாரோ ஒருவர் அறந்தவறி செய்த குற்றத்திற்காக

அந்நாட்டில் விளையும் உணவும் , தாணியங்களும் கூட விளையாமல் போகுமாம். அறம் தவறி வாழ்கிறவர் நாட்டில் உணவுப் பஞ்சம் வந்து அந்நாட்டை வதை செய்யும். ஆகையால் அறம் தவறாமல் நிற்பதே மணித மாண்பு என்ற அறியக் கருத்தை இப்பாடல் புளப்படுத்துகிறது.

“நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கும் அவை எடுத்து  உறவினை
இன்புறூஉம் அந்தணர் இருவரும்
திறம்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
குழுவியைப் பார்த்து உறூஇம் தாய்போல் உலகத்து.7”

உடலில் போதையை உண்டு பன்னும் கள் உண்ணக் கூடாது என்று நெறிப்படி வாழ்பவர்களும் உள்ளனர். அதற்கு மாறாக கள் அ      றுந்தி வாழ்ந்து கொண்டு இருப்பவர்களும் உள்ளனர். இது சரி    , இது தவறு என்று அறச்செயலை எடுத்துரைப்பவர்தான் அந்தனர் (பெரியோர்) மற்றோர் அந்தனர் வேதங்களை ஓதுபவராக இருக்கின்றனர். நெறி படுத்துவதும், ஓதுவதும் என்று இவர்கள் இரு பிரிவாக இருந்தாலும் இருவரும் மக்களை  நல்வழிப்படுத்துவது இவர்கள் தலைசிறந்த பணியாக உள்ளது.  நல்நெறி தவறாமல் வாழ்ந்து காட்டுபவர்கள்தான். அதுபோலவே மக்களையும் வாழவிப்பவர்கள்.

குழந்தைகளை ஒரு தாய் எப்படி வழிநடத்துகிறாளோ அதுபோலவே , இவர்களும் மக்களை வழி நடத்துகின்றனர். அறநெறி தவறாமல் வாழ்வதால்தான், இவ்வுலகில் மழை பொழிகிறது அதனால் இந்த உலகம் செழிப்பாக உள்ளது.

நீர் இல்லாமல் இந்த உலகம் இல்லை. அத்தகைய நீரைப் பெற வேண்டுமானால் அதற்கு மழைப் பொழிய வேண்டும். மழைப்பொழிய வேண்டும் என்றால் , மக்கள் நெறித்தவறாமல் நூல் நெறிப்படி வாழ வேண்டும் என்பதே மேற்கண்ட கலித்தொகைப் பாடலின் கருத்தாக அமைந்துள்ளது.

“ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப் படுவது பேதையார் சொல் தோன்றல்” கலி 133

மேம்பட்ட மனித வாழ்க்கையில் எவையெல்லாம் போற்ற வேண்டும் எவையெல்லாம் தூற்ற வேண்டும் என்று முன்னோர்களின் முதுமொழி தமிழர்களை மட்டுமல்லாமல் இந்த உலகத்தார்களையும் வழிநடத்துகிறது. அதற்கு உதாரணமாகவே இப்பாடல் அமைந்துள்ளது.

இல்லற வாழ்வில் ஈடு கொண்டுள்ள நாம் இல்லறத்தில் நெறிபட வாழ்வோமாயின் வறுமையில் உள்ளவர்க்கு உதவ வேண்டும். உதவுதல் என்பது வேறு வறுமையில் உள்ளர்க்ககு உதவுதல் என்பது வேறு. இந்த உதவியினை ச் செய்கிறபோது நம் வாழ்க்கை மு முமை பெறும்.

மனித வாழ்வில் பிரிவு என்பது இயல்பான ஒன்றுதான். அத்தகைய பிரிவானது நம்மோடு இல்லறம் நடத்தும் துணை வியை விட்டு ஒரு போதும் பிரியக் கூடாது. அப்படி பிரியாமல் வாழ்வதே போற்றுதளுக்கும் பாராட்டிற்கும் உரியது.

இவ்வுலக மாந்தர் எதனை ஒழுக்கம் என கருதி வாழ்கின்றார்களோ அதனை நாம் அறிந்து நடந்துகொள்வ தே பண்பில் மிகச்சிறந்த பண்புடைமை.

தன் உறவுகளோடு எ ப்போதும் நெருக்கமாகவும் ஆரத்தழுவிக்-கொள்வதும் அன்பின் அடையாளமாகும்.

தீது இல்லாத வாழ்வை நெறிபட வாழ நம் முன்னோர்கள் அன்பு, பண்பு, அறிவு, அறம், ஈகை, போற்றவற்றை மனம் உவந்து வாழ்வில் நெறியோடு வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரமாக க் கலித்தொகை காட்டுகிறது.

**முடிவுரை**

கலித்தொகையில் காணப்படும் காதல் பாட்டு அழகிய சொல் ஓவியங்களாகவும் நாடக நிகழ்வைப் போலவும் அமைந்துள்ளது. இதனை வாசிப்போருக்கு த் தெள்ளத் தெளிவாக அறிவையும் அறத்தினையும் போதிக்கின்றது. நூற்று ஐம்பது பாட ல்கள் கொண்ட தொகுப்பாக அக உணர்வு சார்ந்த ஒரு ஆணிற்கும் பெண்ணிற்கும் கூறப்பட்ட செய்தியாக இருந்தாலும் அது அனைவருக்கும் பொருந்தும்படி பொதுமைப் பண்பில் அமைந்துள்ளது.

கி.மு. 500 முதல் கி.பி 200-ல் தொடங்கப்பட்ட சங்க இலக்கியமானது மூத்த குடியான தமிழ்க்குடிமகளுக்கு அறம் , நெறி, ஈகை, போன்ற தலைசிறந்த கருத்துகளை போதித்து அதன்படி வாழவும் வழிகாட்டுகிறது. முன்னோர்க ளின் வாழ்வியல் முறையையும் காட்டுகிறது.

வெறுமையான கற்பனைகளையும் வருணணைகளையும் முதன்மைப்படுத்தாமல், தனி மனித உணர்வின் வழியாக நெறிப் படுத்துதலை முதன்மையாக கொண்டிருக்கிறது.

சங்க இலக்கியத்தில் வாழ்வியல் நெறி என்ற தலைப்பிற்கு ஏற்ப சங்க இலக்கியத்தில் ஒன்றான கலித்தொகையில் காணப்படும் அறம் , நெறி,

அன்பு பண்பு , ஈகை இதன்வழி கா ணலாகும் கலிப்பாடலை எடுத்துக்கொண்டு கலித்தொகை காட்டும் வாழ்வியல் நெறி என்ற தலைப்பின் கீழ் இக்கட்டுரையில் அறநெறி செய்திகளைக் காணலாம்.

**பார்வை நூல்கள்**

1. வெற்றி தமிழ் அகராதி, முனைவர் ச.மெய்யப்பன், மாணிக்கவாசகர் பதிப்பகம், ஏழாம் பதிப்பு-ஏப்ரல் 2006

2. தொல் காப்பியம் பொருளாதாரம் தொகுதி - 1 தமிழண்ணன் செல்லப்பா பதிப்பகம், இரண்டாம் பதிப்பு ஜூன் 2014

3. சங்க இலக்கியம் எட்டுத் தொகை கலித்தொகை , அறிஞர் ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம் , முதல் பதிப்பு டிசம்பர் 2009

4. கலித்தொகை பாடல்கள்: பாடல் எண் 9,11,22,32,37,39,47,99,133